சுருக்கம்

வேளாண்மை – உழவர் நலன் – வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் - 2023-2024-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை - மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு - 25 உழவர் சந்தைகளை ரூ.818.54 இலட்சம் மதிப்பீட்டில் மாநில அரசு நிதியுதவியுடன் புனரமைத்தல் - அனுமதி வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை-உழவர் நலத் (வேவி3) துறை**

அரசாணை (நிலை) எண்.98 நாள்:25.05.2023

திருவள்ளுவர் ஆண்டு 2054
சோபகிருது வருடம்
வைகாசி திங்கள் 11 ஆம் நாள்

படிக்கவும்:

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை இயக்குநர் கடிதம் எண்.உ_ச2/10570/2023, நாள். 12.04.2023 மற்றும் 11.05.2023.

**ஆணை:**

2023-2024-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்:-

"திண்டுக்கல், கள்ளக்குறிச்சி, நாமக்கல், புதுக்கோட்டை, திருப்பூர், திருவண்ணாமலை போன்ற மாவட்டங்களில் உள்ள 25 உழவர் சந்தைகளுக்கு அடிப்படைத் தேவைகளான குடிநீர், கழிப்பறை வசதி, கடைகள் புனரமைப்பு, நடைபாதை வசதிகள் போன்ற பணிகள் ஒன்பது கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்"

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், இயக்குநர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் அவர்கள், மேற்காண் அறிவிப்பின் மூலம் விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் நுகர்வோர்கள் பயனடைவார்கள் என்றும், இத்திட்டம் மாவட்ட அளவில், மாவட்ட நிர்வாகத்தின் வழிகாட்டுதலின்கீழ், வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) மூலம் செயல்படுத்தப்படும் என்றும், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் பொறியியல் பிரிவால் கட்டுமானப் பணிகள் ஒப்பந்தப்புள்ளி மூலம் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

3. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை இயக்குநர், மேலும் தனது கருத்துருவில், இத்திட்டத்தில் அலுவலக அறை புதுப்பித்தல், கழிப்பறைகள் அமைத்தல் மற்றும் புதுப்பித்தல், குடிநீர் அமைப்பு, பாதுகாப்பு சுவர்,

மின்னணு சாதனங்கள் பொருத்துதல், மின்னணு எடை, வடிகால் மறுசீரமைப்பு, கூரை பழுது பார்த்தல், நடைபாதை அமைத்தல் மற்றும் சீரமைத்தல், சுவர்களில் வண்ணம் பூசுதல் போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள உழவர் சந்தைகளில் ரூ.8.75 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்:-

| வ. எண் | மாவட்டம் | உழவர் சந்தை | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | மேட்டுப்பாளையம் | 47.80 |
| 2 | கோயம்புத்தூர் | சுந்தராபுரம் | 26.70 |
| 3 | கோயம்புத்தூர் | சூலூர் | 35.00 |
| 4 | செங்கல்பட்டு | செங்கல்பட்டு | 36.00 |
| 5 | ஈரோடு | பெரியார்நகர் | 34.25 |
| 6 | கள்ளக்குறிச்சி | சங்கராபுரம் | 35.00 |
| 7 | கள்ளக்குறிச்சி | உளுந்தூர்பேட்டை | 35.00 |
| 8 | மதுரை | திருமங்கலம் | 34.96 |
| 9 | மதுரை | உசிலம்பட்டி | 14.18 |
| 10 | மதுரை | ஆனையூர் | 18.56 |
| 11 | நாமக்கல் | குமாரபாளையம் | 41.30 |
| 12 | புதுக்கோட்டை | கந்தர்வகோட்டை | 35.00 |
| 13 | புதுக்கோட்டை | அறந்தாங்கி | 35.00 |
| 14 | சேலம் | அஸ்தம்பட்டி | 7.50 |
| 15 | சேலம் | எடப்பாடி | 46.50 |
| 16 | சேலம் | இளம்பிள்ளை | 65.25 |
| 17 | சேலம் | தம்மம்பட்டி | 49.20 |
| 18 | சேலம் | ஜலகண்டாபுரம் | 41.00 |
| 19 | திருப்பூர் | தாராபுரம் | 35.00 |
| 20 | திருப்பூர் | பல்லடம் | 32.80 |
| 21 | திருப்பத்தூர் | நாற்றாம்பள்ளி | 16.00 |
| 22 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | 35.00 |
| 23 | திருவண்ணாமலை | செங்கம் | 36.00 |
| 24 | திருச்சி | துறையூர் | 35.00 |
| 25 | வேலூர் | காகிதப்பட்டறை | 47.00 |
| | **மொத்தம்** | | **875.00** |

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர், மேலும் தனது கருத்துருவில், வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் திண்டுக்கல், கள்ளக்குறிச்சி, நாமக்கல், புதுக்கோட்டை, திருப்பூர், திருவண்ணாமலை போன்ற மாவட்டங்களில் உள்ள 25 உழவர் சந்தைகள் புனரமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டபோதிலும், திண்டுக்கல் மாவட்டத்தில் செயல்பாட்டிலுள்ள மூன்று உழவர் சந்தைகளும் ஏற்கனவே புனரமைக்கப்பட்டுள்ளதால், திண்டுக்கல் மாவட்டத்திற்கு பதிலாக செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு உழவர் சந்தையினை புனரமைக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

4. எனவே, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர், தனது கருத்துருவில், கீழ்க்காணும் பொருண்மைகளுக்கு ஆணை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்:-

(i) மேற்காண் தொகையான ரூ.8.75 கோடியை மாநில நிதியிலிருந்து ஒப்பளிப்பு வழங்குதல்.

(ii) வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் அவர்களுக்கு அனுமதியளிக்கப்பட்ட தொகையை காசாக்கி தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் அவர்களுக்கு வழங்குவதற்கு அனுமதி அளித்தல்.

(iii) செயற்பொறியாளர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் மூலம் சீரமைப்புப் பணிகள் மற்றும் கட்டுமானப் பணிகளைச் செய்து அதன் முடிவு அறிக்கையை இயக்குநர் மூலம் அரசிற்கு அனுப்புவதற்கு அனுமதி அளித்தல்.

(iv) வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை இயக்குநர் அவர்கள் அந்தந்த மாவட்ட நிர்வாகத்தின் வழிகாட்டுதலின்கீழ் சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் துணை வேளாண் இயக்குநர் (வேளாண் வணிகம்) மூலம் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு அனுமதி அளித்தல்.

(v) வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை இயக்குநர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி வரம்பிற்குள் தேவைப்பட்டால் இடங்கள் / பணிகளை மாற்றுவதற்கு அனுமதி அளித்தல்.

(vi) தொடர் செலவுகள் சம்பந்தப்பட்ட விற்பனைக் குழு நிதியில் இருந்து ஈடு செய்ய அனுமதி அளித்தல்.

5. மேலே பத்தி 4-இல் உள்ள வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆராய்ந்து, தமிழ்நாட்டில் கீழ்க்காணும் பட்டியலில் உள்ள 25 உழவர் சந்தைகளுக்கான அலுவலக அறை புதுப்பித்தல், கழிப்பறைகள் அமைத்தல் மற்றும் புதுப்பித்தல், குடிநீர் அமைப்பு, பாதுகாப்பு சுவர், மின்னணு சாதனங்கள் பொருத்துதல், மின்னணு எடை, வடிகால் மறுசீரமைப்பு, கூரை பழுது பார்த்தல், நடைபாதை அமைத்தல் மற்றும் சீரமைத்தல், சுவர்களில் வண்ணம் பூசுதல் போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் போன்றவற்றை, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள திட்டமதிப்பீட்டின்படி, ரூ.818.54 இலட்சம் செலவில் மாநில அரசு நிதியிலிருந்து செயல்படுத்த நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது:

| வ. எண் | மாவட்டம் | உழவர் சந்தை | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | மேட்டுப்பாளையம் | 43.90 |
| 2 | கோயம்புத்தூர் | சுந்தராபுரம் | 22.80 |
| 3 | கோயம்புத்தூர் | சூலூர் | 31.10 |
| 4 | செங்கல்பட்டு | செங்கல்பட்டு | 32.10 |
| 5 | ஈரோடு | பெரியார்நகர் | 31.87 |
| 6 | கள்ளக்குறிச்சி | சங்கராபுரம் | 34.60 |
| 7 | கள்ளக்குறிச்சி | உளுந்தூர்பேட்டை | 34.60 |

| | | | |
|---|---|---|---|
| 8 | மதுரை | திருமங்கலம் | 35.06 |
| 9 | மதுரை | உசிலம்பட்டி | 12.78 |
| 10 | மதுரை | ஆனையூர் | 19.10 |
| 11 | நாமக்கல் | குமாரபாளையம் | 38.90 |
| 12 | புதுக்கோட்டை | கந்தர்வகோட்டை | 35.00 |
| 13 | புதுக்கோட்டை | அறந்தாங்கி | 35.00 |
| 14 | சேலம் | அஸ்தம்பட்டி | 4.06 |
| 15 | சேலம் | எடப்பாடி | 43.30 |
| 16 | சேலம் | இளம்பிள்ளை | 62.65 |
| 17 | சேலம் | தம்மம்பட்டி | 47.40 |
| 18 | சேலம் | ஜலகண்டாபுரம் | 38.60 |
| 19 | திருப்பூர் | தாராபுரம் | 31.10 |
| 20 | திருப்பூர் | பல்லடம் | 28.90 |
| 21 | திருப்பத்தூர் | நாற்றாம்பள்ளி | 14.80 |
| 22 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | 31.10 |
| 23 | திருவண்ணாமலை | செங்கம் | 32.10 |
| 24 | திருச்சி | துறையூர் | 35.00 |
| 25 | வேலூர் | காகிதப்பட்டறை | 42.72 |
| | **மொத்தம்** | | **818.54** |

6. மேலே பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையானது கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:

2435 ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் – 01 விற்பனை தரக்கட்டுபாடு – 101 விற்பனை வசதிகள் – மாநிலச் செலவினங்கள் – AJ உழவர் சந்தைகளை நவீன வசதிகளுடன் புனரமைத்தல் - 317 சிறு பணிகள் – 01 சிறு பணிகள்

(IFHRMS DPC: 2435 01 101 AJ 317 01)

7. மேலே பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை காசாக்கி தலைமைச் செயல் அலுவலர் (CEO), தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் (TNSAMB)-க்கு வழங்குவதற்கு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர் அவர்களுக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

8. 25 உழவர் சந்தைகளுக்கு தேவையான சீரமைப்புப் பணிகள் மற்றும் கட்டுமானப் பணிகளைச் செய்து, அதன் முடிவு அறிக்கையை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர் மூலம் அரசுக்கு அனுப்ப செயற்பொறியாளர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் (TNSAMB) அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் துணை வேளாண்மை இயக்குநர் (வேளாண்மை வணிகம்) மூலம் அந்தந்த மாவட்ட நிர்வாகத்தின் வழிகாட்டுதலின்கீழ் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

10. ஒதுக்கப்பட்ட நிதி வரம்பிற்குள் தேவைப்பட்டால் இடங்கள் / பணிகளை மாற்றுவதற்கு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

11. மேலும், இப்பணிகள் குறித்த தொடர் செலவுகளை சம்பந்தப்பட்ட விற்பனைக் குழு நிதியில் இருந்து ஈடுசெய்ய வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

12. இவ்வரசாணை, நிதித் துறையின் அ.சா. எண் 20737/2023, நாள் 24.05.2023-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம், சென்னை-32.
தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம், சென்னை-32.
முதன்மை கணக்காய்வுத் தலைவர், (A&E, / Audit / AAD / G&SSA / E&RSA), சென்னை-18.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை-108.
முதுநிலை செயலர் / செயலர், விற்பனைக்குழு (தொடர்புடையது)
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
தமிழ்நாடு. மாவட்ட கருவூல அலுவலர் (தொடர்புடையது)

நகல்
நிதித் (வேளாண்மை-உழவர் நலன்) துறை, சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (வேளாண்மை-உழவர் நலன்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், வேளாண்மை-உழவர் நலத்துறை, சென்னை-9.
வேளாண்மை-உழவர் நலத் (OP.3 / B&P) துறை, சென்னை-9.
உதவி நிரலர், வேளாண்மை-உழவர் நலத்துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

B. [signature] 25/05/2023
பிரிவு அலுவலர்

# இணைப்பு

## (அரசாணை (நிலை) எண்.98, வேளாண்மை – உழவர் நலத் (வே.வி3) துறை, நாள்: 25.05.2023)

பணிவிவரம் - திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | மாவட்டம் | உழவர் சந்தை | முழுமையான பொலிவேற்றம் (அலுவலகம், கழிப்பறை, தொகுதி, வரவேற்பறை, சுற்றுச்சுவர் | குடிநீர் வசதி உட்கட்டமைப்பு புதுப்பித்தல் | வடிகால் அமைப்பு புதுப்பித்தல் | மேற் கூரை பழுது பார்த்தல் | ஒளி அமைப்பு | நடைபாதை (தேவைப் படும் இடங்களில்) | சுற்றுச் சுவர் மீதான கருத்துக்கலை ஓவியம் | பிறபணிகள் ஏதாவது (மின்னனு எடை, சாலைப் பணிகள்) | கணினி | குளிர் சாதன கிடங்கு (தேவைப் பட்டால்) | மொ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | கோயம்புத்தூர் | மேட்டுப்பாளையம் | 6.05 | | | 12.00 | | 20.00 | 3.00 | 2.25 | 0.60 | | 43.9 |
| 2. | | சுந்தராபுரம் | 12.20 | | | | 0.50 | | 3.00 | 6.5 | 0.60 | | 22.8 |
| 3. | | தூலூர் | 13.45 | 1.25 | | 3.60 | 1.30 | 2.65 | 3.00 | 5.25 | 0.60 | | 31.1 |
| 4. | ஈரோடு | பெரியார் நகர் | 9.62 | 5.51 | | 5.09 | 5.80 | | 3.00 | 2.25 | 0.60 | | 31.8 |
| 5. | கள்ளக்குறிச்சி | சங்கராபுரம் | 11.00 | | 0.50 | 3.00 | 7.50 | 2.00 | 3.00 | 2.00 | 0.60 | 5.00 | 34.6 |
| 6. | | உளுந்தூர் பேட்டை | 10.00 | | 1.00 | 4.00 | 7.00 | 2.00 | 3.00 | 2.00 | 0.60 | 5.00 | 34.6 |
| 7. | மதுரை | திருமங்கலம் | 17.96 | 0.26 | | 6.59 | 1.65 | | 3.00 | 5.00 | 0.60 | | 35.0 |
| 8. | | உசிலம்பட்டி | 5.83 | | | | 0.85 | | 3.00 | 2.50 | 0.60 | | 12.7 |
| 9. | | ஆனையூர் | 9.00 | 0.19 | | 0.62 | 0.97 | 1.72 | 3.00 | 3.00 | 0.60 | | 19.1 |
| 10. | நாமக்கல் | குமாரபாளையம் | 11.94 | 1.66 | | 6.87 | 6.84 | | 3.00 | 7.99 | 0.60 | | 38.9 |
| 11. | புதுக்கோட்டை | கந்தர்வகோட்டை | 10.00 | 5.00 | | 12.00 | 2.00 | | 3.00 | 3.00 | | | 35.0 |
| 12 | | அறந்தாங்கி | 8.00 | 7.00 | | 10.00 | 3.00 | | 4.00 | 3.00 | | | 35.0 |
| 13. | சேலம் | அஸ்தம்பட்டி | 3.10 | | | | 0.96 | | | | | | 4.0 |
| 14. | | எடப்பாடி | 18.08 | 1.18 | | 5.15 | 5.58 | 3.50 | 3.00 | 6.21 | 0.60 | | 43.3 |
| 15. | | இளம்பிள்ளை | 29.43 | 1.21 | | 5.06 | 8.60 | 4.50 | 3.00 | 10.25 | 0.60 | | 62.6 |
| 16. | | தம்மம்பட்டி | 19.94 | 1.28 | | 7.91 | 7.43 | | 3.00 | 7.24 | 0.60 | | 47.4 |
| 17. | | ஜலகண்டாபுரம் | 19.95 | 1.18 | | 2.05 | 5.54 | | 3.00 | 6.28 | 0.60 | | 38.6 |
| 18. | திருப்பூர் | தாராபுரம் | 12.70 | 0.75 | | 6.80 | 1.00 | 4.00 | 3.00 | 2.25 | 0.60 | | 31.1 |
| 19. | | பல்லடம் | 17.50 | | | 1.00 | 2.30 | 2.25 | 3.00 | 2.25 | 0.60 | | 28.9 |
| 20. | திருப்பத்தூர் | நாற்றாம்பள்ளி | 5.00 | 3.80 | | | 1.20 | | | 4.20 | 0.60 | | 14.8 |
| 21. | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | 9.00 | 10.00 | | | 2.00 | 3.50 | 3.00 | 3.00 | 0.60 | | 31.1 |
| 22. | | செங்கம் | 10.00 | 3.00 | 4.00 | 4.00 | 3.00 | 2.00 | 1.00 | 4.50 | 0.60 | | 32.1 |

த.பி.பா

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3. | செங்கல்பட்டு | செங்கல்பட்டு | 5.00 | 3.00 | | 4.50 | 3.00 | 8.00 | | 8.00 | 0.60 | | 32.10 |
| 4. | திருச்சி | துறையூர் | 12.00 | 7.00 | | 10.00 | 3.00 | | 3.00 | | | | 35.00 |
| 5. | வேலூர் | காகிதப்பட்டறை | 10.00 | 5.00 | | 12.00 | 7.00 | | | 8.12 | 0.60 | | 42.72 |
| | | | 296.75 | 58.27 | 5.50 | 122.24 | 88.02 | 56.12 | 62.00 | 107.04 | 12.60 | 10 | 818.54 |

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்